22 ஜூலை 2018

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 16ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் எல்லாருக்கும் எல்லாமானேன்

# ஆயனின் குரலுக்கு நம்பிக்கையில் ஆடுகள் செவிசாய்க்கும்

வெற்றிகரமான ஏதாவதொன்றை முடித்து விட்டால், நமக்குள் பரவச உணர்வு ஏற்படுவதுண்டு அல்லவா?

கடந்த வாரம் பன்னிருவருக்கும் பணியாணை வழங்கி, நற்செய்தியைப் போதிக்க அனுப்பியதை மாற்கு நற்செய்தியில் பார்த்தோம். இன்று, இதயம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் திருப்புவதை வாசிக்கிறோம்.



அவர்கள் பரவசம் அடைந்தார்கள். அவர்களின் குரு செய்ததை அவர்களும் செய்தனர். ஒளிர்வதற்கான காலத் தருணம் அது, தங்களது சகாக்களுக்கிடையில் தங்களது நிலையை மேம்படுத்திக் கொண்டார்கள்.

திரும்பி வந்த சீடர்களின் கதைகளைக் கேட்டு அவர்களைத் தட்டிக் கொடுக்கவில்லை இயேசு என மாற்கு நற்செய்தி கூறுகிறது. மாறாக, 'நீங்கள் பாலைநிலத்திலுள்ளள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்' என்றார். மக்களைச் சந்தித்தப் பின்னர் இவ்வாறே அவர் செய்கிறார். தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று செபிக்கிறார்.

இதில் ஆண்டவரின் போதனை என்ன? நிதானம் என்ற வார்த்தை நம் சிந்தனைக்கு வருகிறது. அவசரமான உலக வாழ்க்கையில் தொலைத்து விட்ட வார்த்தைகளில் ஒன்று, ஆயனில்லாமல் மேற்கொள்ளும் காரியங்கள் சீடர்கள் அப்படியே விட்டுவிட்டால், தங்கள் செய்யும் காரியங்கள் வெறும் நடவடிக்கைகளாக மட்டுமே இருந்து விடும். திருச்சபையின் மீது அளவற்ற நேசம் கொண்டு பொதுநிலையினர் அர்ப்பணத்தோடு பணியாற்றுவர், ஆனால் நிதானம் இல்லாததால், களைந்து போய்விடுவர். தொடர்ந்து செயல்பாட்டோடு இருக்க வேண்டுமென்றால், நல்லாயனின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும்.

இன்று, தயார்நிலை குறித்து இயேசு போதிக்கிறார். மாற்கு 6:30-34, இயேசுவும் அவரது சீடர்களும் படகில் அக்கரைக்குச் சென்றனர். மக்களோ கால்நடையாக வந்து விட்டனர். கரை இறங்கிய போது, பெருந்திரளான மக்களைக் கண்டார். இயேசு செய்தது என்ன? 'ஆயரில்லா ஆடுகளைப் போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு' காட்டினார்.

தமது சீடர்களைத் தனிமையான இடத்திற்குக் கொண்டு செல்லும் திட்டத்தை இயேசு கொண்டிருக்கலாம், ஆனால் குறிப்பிட்ட சூழ்நிலையை கருதி, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய அவசியத்தை இயேசு நமக்குப் போதிக்கிறார்.

ஆண்டவர் எனது நல்லாயன், எனக்கேதும் குறையில்லை. நம்பிக்கை சீடர்கள் என்பதால், நிதானமாக இருக்கக் கற்றுக் கொள்வோம். நல்லாயனின் குரலைக் கேட்க அவரோடு அணுக்கமாக இருப்போம். ✝

**உங்கள் இதயத்தின் குரலைக் கேளுங்கள் செயல்படுங்கள்.**

- புனித ஆசீர்வாதப்பர்

**வாரம் ஒரு வசனம்**

நல்லாயனின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 29/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஜுலை (ஆடி) மாதத்தின் கருப்பொருள்:*
***நான் கிறிஸ்துவுக்குள் எல்லாமானேன்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 16ஆம் ஞயிறு** **சனி 21-07-2018 - ஞாயிறு 29-07-2018**

எரே: 23: 1-6 தி.பா: 22: 1-3a, 3b-4, 5, 6 எபே: 2: 13-18 மாற்கு: 6: 30 - 34

**"ஆண்டவரே, என் ஆயர், எனக்கேதும் குறையில்லை" - திபா 22**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 21 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(ம.கல்வி படிவம் 3) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**உறுதிப்பூசுதல் அருளடையாளக் கொண்டாட்டம்** |
| ஞாயிறு | 22 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ) (புனித கிறகோரி)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |
| துங்கள் | 23 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) நடைபெறாது* |
| செவ் | 24 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 25 | 6.45 கா | திருப்பலி | **மாலை 7.45 மணி அ.தி.ச ஒருங்கிணைப்பு குழு ஒன்றுகூடல் (BECCOT)** |
| வியா | 26 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) திரு இரதய ஆண்டவர் சிற்றாலயம் - மார்ஜெரி*** |
| வெள் | 27 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 17ஆம் ஞயிறு**

2அரசர்: 4: 42-44 தி.பா: 144: 10-11, 15-16, 17-18 எபே: 4: 1-6 யோவான்: 6: 1 - 15

**"ஆண்டவரே, எல்லா உயிரினங்களின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்றீர்" - திபா 144**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 28 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித லியோ) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 29 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ) (புனித டெனிஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## 2018 ஜூலை (ஆடி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

**i) பங்கு காணிக்கை:**

a) 14/15 ஜூலை 2018 ரிம:9,313.50

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

Ii) நற்கருணை : நற்கருணை விருந்தில் பங்கெடுப்பவர்கள் நற்கருணை பெற்றுக்கொள்ளும் பொழுது "ஆமென்" என்று தெளிவாகக் கூறிய பின்னர் பெற்றுக்கொள்ளவும்

**ii) ஆலய உடைமைகளை பராமரித்தல் :** (ஒளித்திரைக் கருவிகள் (LCD), மேசை மற்றும் நாற்காலிகள்) பாவனைக்கு உட்படுத்திய பின்னர் கருவிகளையோ பொருட்களையோ எடுத்த இடங்களில் மீளவும் வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**

a) ஸீனோ ஜெறோம் & ஹெவறீனா 28/7/2018 காலை 11.00

- **நமது பங்கின் அனைத்து** பணிக்குழுக்கள் அப்போஸ்தலகுழுக்கள் அனைத்தும் தங்களுடைய திட்டங்கள், வரவு செலவு கணக்கு ஆகியவற்றை பங்கு குருவானவரிடம் கலந்து பேச அழைக்கப் படுகிறீர்கள். உங்களுடைய நிகழ்வுகள், உரை நிகழ்த்துவோர், நடைபெறும் இடம், கணிணி சாதனங்கள் அனைத்தையும் ஒரு மாதத்திற்கு முன்னதாக முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். உங்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி.

- **2018/2019 கிறிஸ்துவ புகுமுக வகுப்புகள்** 08/07/2018 முதல் தொடங்கவுள்ளது. இயேசுவைப் பற்றி அறிய ஆர்வமுள்ளவர்களை உற்சாகப்படுத்தி அழைத்து வாருங்கள். இன்றே பதிந்து கொள்ளுங்கள். தொடர்புக்கு: லியோ 013- 3977 639 அல்லது பங்கு அலுவலகம்

காலை 8.45 - 10.15 (சீனம் ) – ஆலய மண்டபம் மேல் அறை
காலை 9.00 - 10.30 ( தமிழ் ) – ஆலய மண்டபம் மேல் அறை
காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) – விவிலிய அறை
காலை 11.00 - 12.30 ( தே. மொ ) – ஆலய மண்டபம் மேல் அறை

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச வினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

- **170 ஆம் ஆண்டின் நிறைவு - காஃபி டேபிள்- கார்னர் ஸ்டோன் புத்தகம்** 170 ஆண்டு வரலாற்றைக் கொண்ட புத்தகம் இப்போது விற்பனையில் உள்ளது. இதற்காக நாம் பெருமை கொள்ள வேண்டும். நாடு மற்றும் உலகில் பல்வேறு இடங்களில் வாழும் உங்கள் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் இதைப் பரிசாக கொடுத்து மகிழ்ச்சி அடையுங்கள். திருப்பலிக்குப் பின் 3 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் முகப்புகளுக்குச் சென்று புத்தகங்களை வாங்கிக்கொள்ளுங்கள். ஒன்றின் விலை ரிம:40.00 உங்களுக்குத் தெரிந்த குருவானவருக்கு இதைப் பரிசளிக்க விரும்பினால், பட்டியலில் இருக்கும் அவர்களின் பெயர்களைத் தெரிவு செய்யுங்கள். அனைத்து அதிச/சோன் சிற்றாலயங்கள்,. பணிக்குழுக்கள், மற்றும் ஒவ்வொரு குடும்பமும் இதை வாங்கிப் பயனுடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- **உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் பெறவிருக்கும் 88 மாணவர்களுக்காகவும் செபிப்போம் :** உறுதிப்பூசுதல் திருப்பலி 21-07-2018 (சனி) மாலை 6.00 மணிக்கு நடைபெறும்

- **அதிச வில் ஒன்று கூட நேரம் ஒதுக்குவோம்.** "கிறிஸ்துவில் எல்லாமும் ஆனேன்" விவிலியத்தை வாசித்து, தியானித்து, வாழ்ந்து, விளிம்பு நிலையில் இருப்போருக்கு சென்று உதவி செய்வோம்.

- **பாடல். உபசரிப்பு மற்றும் மறை உரை:** ஆன்மாவுக்கு உணவு இன்றைய பங்கிற்கு தூதுரை; நம் பங்கு சமூகத்தில் மிக நல்லனவற்றுக்காக செபிப்போம், பணி செய்வோம்.

- **திருமணமான தம்பதியருக்காக ஒரு நாள் கருத்தரங்கு:** பிறதொரு நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது, திகதியும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்

- **சூப் கிச்சன்** இப்போது ஏன் ரெத்னம் தலைமையில் நடைபெறுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக திறம்பட வழிநடத்தி வந்த திரு. ஸ்டீபன் டெனிசாப்பு அவர்களுக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வோம். உணவு நேரத்தின்போது தன்னார்வத்துடன் உதவி செய்ய இன்னும் நபர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு : ஆன் 017 875 8868

- **இறப்பு திருப்பலியில்** இறந்தோரைப் பற்றிப் பாராட்டும் உரை: இறந்தவரைப் பற்றி ஒருசில வார்த்தைகள் குடும்பத்தினர் கூற வேண்டி இருந்தால், A4 தாளில் (ஒரு பக்கம் மட்டுமே) எழுதி எடுத்து வந்து திருப்பலிக்கு முன் பங்கு அலுவலகத்தில் முன்னரே அறிவிக்க வேண்டியது மிகவும் அவசியம். தயவு செய்து கடைசி நேரத்தில் வந்து தெரிவிப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- **2018 சோய்ஸ் :**
  1. **தமிழ்** (மினவுதல் மாதா தேவாலயம்) : 24 (வெள்ளி) – 26 (ஞாயிறு) ஆகஸ்ட் 2018 தொடர்புக்கு : ரெய்மண்ட் 016 689 4257
  2. **ஆங்கிலம்** (APC கோலாலும்பூர்) : 5 (வெள்ளி) – 7 (ஞாயிறு) அக்டோபர் 2018 தொடர்புக்கு : choiceklrecruitment@gmail.com

- **கத்தோலிக்க திருமண தயாரிப்புப் பயிற்சி 6 வாரங்கள் (மினவுதல் மாதா தேவாலயம்) (CMPC):** தமிழ் / ஆங்கிலம் / சீனம் 01-09-2018 ஆரம்பமாகிறது. பங்கு தந்தையை சந்திக்கவும். தொடர்புக்கு ஆலய அலுவலகம்

- **விவிலிய ஞாயிறையொட்டி விவிலிய புதிர் குறுக்கெழுத்துப் போட்டி** நடைபெறவுள்ளது. அதற்கான வினாத்தாள்களை கட்டணம் ரி.ம 1.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ஒருவர் எத்தனை வினாத்தாள்களை வேண்டுமானாலும் பெற்று விடைகளை எழுதி அனுப்பலாம். சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள். முதல் மூன்று பரிசுகளும் மற்றும் 10 ஆறுதல் பரிசுகளும் உங்களுக்காக காத்திருக்கின்றன. வினாத்தாள்கள் தமிழ் திருப்பலிகளுக்குப் பின்னர் ஆலய மாதா கெபி அருகில் பெற்றுக்கொள்ளுங்கள். விடைத்தாள்களை ஆகஸ்டு 5ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ விவிலிய பணிக்குழு ஆசிரியர்களிடமோ அல்லது ஆலய அலுவலகத்திலோ ஒப்படைக்கலாம்.
மேலதிக தொடர்புக்கு : ரீத்தா சேவியர் : 012 918 1620 அன்னமேரி : 014 222 4924